**கட்டுநாயக்க சீதுவை நகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கட்டுநாயக்க சீதுவை நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள கட்டுநாயக்க சீதுவை நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்பு இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) வெகுமதியாக கிடைத்திருந்த மோட்டார் வாகனமொன்ற ரூபா 1,300,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கும் போது விரிவான வருமானக்கூற்றின் குறிப்பு இலக்கம் 05 இன் கீழ் பெறுமானத் தேய்வுப் பெறுமதி இனங்காணப்படாது மொத்தத் தொகையும் மீளாய்வாண்டின் விரிவான வருமானமொன்றாக இனங்காணப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் இறுதிக் கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | உள்ளூராட்சி நிறுவனங்களுக் கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) நியம இலக்கம் 11.10 மற்றும் 2021 திசெம்பர் 12 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் LGD/10A/4/ந.கி./2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6 ஆம் பிரிவின் பிரகாரம், நிறுவனத்தின் மூலம் மற்றும் நிறுவனத்திற்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பிலான ததகவல்கள் குறிப்பொன்றாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. (இ) நியம இலக்கம் 18.5(இ) மற்றும் 2021 பெப்ரவரி 22 ஆந் திகதிய ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் LGD/10A/4/ந.கி./2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவின் பிரகாரம், மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றின் ஒதுக்கம் மற்றும் பங்கீடுகளை குறிப்பிடுவதற்கு தனியானதொரு நிரல் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் இறுதிக் கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| உரிய நியமங்களுடனான தொடர்பு இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபைக்கு சொந்தமான பௌதீக ரீதியில் இனங்காண முடியாத 21 போர்ச் பரப்பளவான காணியானது கட்டுநாயக்க அம்பகஹாவத்த எனும் இடத்தில் ரூபா 4,200,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன், அந்த காணியை பௌதீக ரீதியில் இனங்காணமை தொடர்பில் கணக்கீட்டுப் பதிவொன்றின் ஊடாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சீராக்கங்கள் எதிர்வரும் வருடத்தில் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 2,000,000 தொகைக்கு கொன்கிறீட் இடுவதற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ருத்திரிகோவத்த பிரதான வீதியானது 2021 ஆம் ஆண்டின் போது கொன்கிறீட் இடுவதற்குப் பதிலாக தாரிடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடட்ன, அதன் பெறுமதி நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டுள்ள போது கொன்கிறீட் இடுவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,000,000 தொகை மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான புத்துருவாகும் பணியொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது. | உரிய சீராக்கங்கள் எதிர்வரும் வருடத்தில் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | தெல் கோச்சி வீதி சனசமூக மன்றமானது ரூபா 40,000,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டு கட்டிடங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டுள்ள போது, அது புத்துருவாகும் பணிகளின் கீழும் ரூபா 1,662,461 ஆக காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் புத்துருவாகும் பணிகள் கணக்கு அந்த பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மீளாய்வாண்டுக்கு உரியதாக கிடைத்திருந்த ரூபா 864,000 ஆன முற்பணம் (key money) கடந்த வருடத்திற்கு உரியதாக கிடைத்துள்ளததாக கருதி கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | மீளாய்வாண்டின் போது 2019 ஆம் ஆண்டிற்கான வைப்பொன்றில் ஈடு செய்யப்பட்டிருந்த 2020 ஆம் ஆண்டுக்குரிய ரூபா 425,333 ஆன சந்தைக் கட்டண வருமானம் கடன் | உரிய சீராக்கங்கள் எதிர்வரும் வருடத்தில் மேற்கொள்ளப்படும் என்பதை ததாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். | |

| | | | |
|---|---|---|---|
| | பட்டோருக்கு செலவு வைக்கப்படாது மீளாய்வாண்டின் வருமானமொன்றாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | ஊழியர் பிணை வைப்புகளை விடுவிப்பதற்காக வங்கியிலிருந்து கிடைத்திருந்த ரூபா 22,523 பெறுமதியான காசோலையொன்று, காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான காசு மற்றும் காசுக்கு சமனானவற்றிற்கு சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய சீராக்கங்கள் எதிர்வரும் வருடத்தில் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

**1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள வீதவரி வரி விடயத்தில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக கணக்கு மீதிகள் மற்றும் பயன்பாட்டு ஆவணங்களின் பிரகாரமான மீதிகளுக்கிடையே ரூபா 6,558,827 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | எதிர்வரும் வருடத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | நிலவும் மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 103(1) ஆம் இலக்கம் மற்றும் 104 ஆம் இலக்கம் | 2021 யூலை 05 ஆந் திகதி விபத்திற்குள்ளாகிய முற்சக்கர வண்டி தொடர்பில் உரிய நிதிப் பிரமாணங்களின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், வண்டியை பழுதுபார்ப்பதற்காக காப்பீட்டின் ஊடாக மீளளிப்பு செய்யப்படாத ரூபா 10,405 ஆன தொகை சபை நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அரசின் நிதிப் பிரமாணம் 103(1)(ஆ) பிரகாரம், அவசர விபத்துகள் தொடர்பில் பொலிசிங்கு அறிவிக்காமை தவறு என்பதை ஏற்றுக்கொள்வதுடன், நிதிப்பிரமாணம் 104(1) இன் பிரகாரம், விசாரணையொன்றை மேற்கொண்டு நட்டத்தினை ஏற்படுத்திய சாரதியின் சம்பளத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக்கொள்கின்றேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 396(ஈ) ஆம் இலக்கம் | வழங்கப்பட்ட போதிலும், கொடுப்பனவுகளுக்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 926,976 பெறுமதியான அரச வங்கியொன்றின் 36 காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து காசோலைகளையும் வருமானத்திற்கு எடுப்பதற்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 193,042,302 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 199,670,282 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியான குத்தகை நிலுவையானது மீளர்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக ரூபா 9,096,000 இனர் அதிகரித்திருந்ததுடன், ஆண்டின் இறுதியில் காண்பிக்கப்பட்டிருந்த நிலுவையினுள் 80 வணிக | தற்போது அறவிடப்பட வேண்டிய நிலுவையை அறவிடும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | நிலுவை வருமானத்தை வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனங்களின் ரூபா 50,000 இற்கு மேலதிகமாக காாணப்பட்ட நிலுவைத் தொகையானது ரூபா 12,651,743 ஆகும். | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் அனுமதிப்பத்திரக் கட்டண மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 5,001,000 ஆன போதிலும், பட்டியலிடல் மற்றும் சேகரித்தல் ரூபா 3,163,000 ஆக காணப்பட்டதுடன், வியாபார ஆய்வில் 563 முயற்சிகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், 313 முற்சிகளுக்கு மாத்திரமே அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் செலத்தாத நிறுவனங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | அனுமதிப்பத்திரம் பெறாத வணிகங்களை சட்டங்கள் மூலம் கையாள வேண்டும். |

**2.2.2 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சீதுவை புதிய சந்தைக் கட்டிடத் தொகுதியில் பழைய விற்பனைக் கடை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 12 கடைகளுக்கு சபையின் அங்கீகாரத்தின அப்படையில் 2010 மே 31 முதல் 2012 மே 31 ஆந் திகதி வரையிலுமான 2 வருட காலத்திற்க மாத்திரம் மதிப்பீட்டு தொகையின் 50 சததவீதம் அறவிடப்பட வேண்டிய போதிலும், 2010 ஆம் ஆண்டு முதல் 2018 வரை 8½ வருடங்களுக்கு மேற்பட்ட காலமொன்று 50 சதவீதம் படியாக அறவிடப்பட்டிருந்தது. 2017 யூன் மாதத்தில் மீள வழங்கப்பட்ட மதிப்பீட்டினை நடைமுறைப்படுத்தாது, சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் 2018 செப்தம்பர் 01 ஆந் திகதி முதல் அறவிடப்படும் | 2019 செப்தம்பர் 27 ஆந் திகதி சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வாடகைத் தொகையை 50 சதவீதமாக்குவதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. | அரச மதிப்பீட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாடகை திருத்தி 2021 திசெம்பர் வரையிலும் அறவிடப்பட்டிருந்ததுடன், உள்ளூராட்சி ஆணையாளரின் 2016 நவம்பர் 01 ஆந் திகதிய LGD/13/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் ஒரு தடவை மாதாந்த வாடகை அரசின் மதிப்பீட்டின் அடிப்படையில் மீளமைக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் குத்தகை வாடகை திருத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கட்டுநாயக்க வர்த்தக கட்டிடத் தொகுதியின் கடைகளுக்காக 2019 யூலை 30 ஆந் திகதி மதிப்பீட்டு அறிக்கையொன்று கிடைத்திருந்த போதிலும், அதனை நடைமுறைப்படுத்தாது 06 கடைகளுக்காக 07 வருடங்களை விட பழமையான 2013 ஆம் ஆண்டின் மதிப்பீட்டுத் தொகையம், 04 கடைகளுக்காக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டின் மதிப்பீட்டுத் தொகையின் 50 சதவீதமான தொகையும் 2021 திசெம்பர் மாதம் வரையிலும் அறவிடப்பட்டிருந்தது. | 2014 ஆகஸ்ட் 29 ஆந் திகதி புதிய மதிப்பீட்டு வாடகைத் தொகை அதிகரித்துள்ளமையால், அதில் நியாயமொன்று வழங்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்த கோரிக்கைகள் 2019 செப்தம்பர் 27 ஆந் திகதி இடம்பெற்ற பொதுச் சபைக்கு சமர்ப்பித்த பின்னர் பழைய தொகையை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. | அரச மதிப்பீட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | லங்கா சதொச நிறுவனத்திற்கு சீதுவ வர்த்தக கட்டிடத் தொகுதியின் 06 கடைகள் மற்றும் கட்டுநாயக்க வர்த்தக கட்டிடத் தொகுதியின் கடையொன்றும் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த கடைகளின் குத்தகை உடன்படிக்கைகளின் செல்லுபடியான காலம் முறையே 2015 மார்ச் 17 மற்றும் 2015 திசெம்பரினை கடந்து 04 சென்றிருந்தது. குத்தகை உடன்படிக்கை | புதிய மதிப்பீட்டு தொகை 2022 சனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், சீதுவ வர்த்தக கட்டிடத் தொகுதியின் மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ளல் தொடர்பில் 2022 பெப்ரவரி 24 ஆந் திகதி நினைவுறுத்தல் கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. | சட்டரீதியான ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இரத்தாகி 06 வருட காலம் கடந்திருந்த போதிலும், இரு தரப்பினராலும் செல்லுபடியான உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | கட்டுநாயக்க பொது சந்தைக்கு அருகாமையில் கடை இலக்கம் 01 மற்றும் 02 ஆகியன பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீடின்றி 2021 யூலை 01 ஆந் திகதி முதல் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முறையே ரூபா 7,500 மற்றம் ரூபா 7,700 ஆன வாடகைத் தொகைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டுக்காகவும், மதிப்பீடொன்றினை மேற்கொள்ளாது ஆகக் குறைந்த மதிப்பீடு முறையே ரூபா 7,500 மற்றும் 7,700 ஆக தீர்மானித்து 2021 ஒக்தோபர் 07 ஆந் திகதி பெறுகை அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2021 பெப்ரவரி மாதத்தில் இடம்பெற்ற பொதுச் சபையில் தீர்மானத்தின் பிரகாரம் தற்காலிக மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு, அறவிடப்பட்டுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டுக்கும் அந்த பெறுமதியின் அடிப்படையில் கடை வாடகை அறவிடப்பட்டுள்ளது என்பதை தெரிவிக்கின்றேன். | முதன்மை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை வசூலிக்கப்படும். |
| (உ) | அவரிவத்த நாளங்காடியை குத்தகைக்கு வழங்குதல் தொடர்பில் 2021 நவம்பர் 15 ஆந் திகதியளவில் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட தளப் பரிசோதனையில் வாடகை அறவிடப்பட வேண்டிய கடைகளுக்கு மேலதிகமாக நடைபாதையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 37 அத்துமீறிய கடைகளிலிருந்து குத்தகையாளரால் வாடகை அறவிடப்பட்டவாறு காணப்பட்து. | அங்கீகரிக்கப்படாத கடைகளில் இருந்து குத்தகை அறவிடக் கூடாது எனவும், தற்போது நாட்டில் நிலவும் மோசமான பொருளாதார சூழ்நிலையை கருத்தில் கொண்டு, அந்த கடைகளை அகற்ற திட்டமிடப்பட்டுள்ள போதிலும், அனுமதியற்ற கடைகளை அகற்றுவதை தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்படாத கடைகளில் வாடகை வசூலிக்கக் கூடாது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும்

நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சீதுவ லியனகேமுல்ல பள்ளி வீதியிலிருந்து கருணாரத்தன மாவத்த வரையிலும் புகையிரத பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தை நுழைவு வாயிலாக பயன்படுத்திய குடியிறுப்பாளர்களுக்கு வீதி தடைகளை அகற்றுவதற்காக காணிகளை கையகப்படுத்தும் போது தனியார் காணிகளின் சுமார் 10 அடியை சபை சுவீகரித்து இந்த குடியிருப்பாளர்களுக்கு கருணாரத்த வீதியினை பயன்படுத்த இடமளித்து, காணித்துண்டு இலக்கம் 11 இன் மதிப்பீடான ரூபா 882,500 ஆன தொகையை நட்டஈடாக செலுத்ததாது, புகையிரத வீதியை பயன்படுத்துவதற்க இடமளித்து காணித்துண்டு இலக்கம் 01 இன் மதிப்பீடான ரூபா 1,887,000 ஆன நட்டஈட்டுத் தொகை கந்தான பிரதேச செயலாளருக்கு 2017 பெப்ரவரி 23 ஆந் திகதி வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இந்த காணிகளை கையகப்படுத்தும் அதிகாரச்சட்டத்தின் கீழ் நட்டஈட்டுக்கு மேலதிகமாக காணியின் அவசர பயன்பாட்டினை பொறுப்பேற்ற திகதியிலிருந்து, நட்டஈடு செலுத்துதல் இறுதித் திகதி வரையிலும் 7 சதவீத வட்டித் தொகையை செலுத்த நேரிடும். எந்தவொரு மதிப்பீடும் 3 வருட காலத்திற்கு செல்லுபடியாவதுடன், இதுவரையிலும் 5 வருட காலம் கடந்துள்ளதுடன், செலுத்த நேரிடும் நட்டஈட்டுத் தொகை மற்றும் வட்டி | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் காணி சுவீகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இழப்பீடு காலதாமதமின்றி உரிய நேரத்தில் வழங்கப்படும் எனவும் உறுதியளிக்கிறேன். நிலம் கையகப்படுத்தும் செயல்முறை பல நிறுவனங்களை உள்ளடக்கிய ஒரு நீண்ட செயல்முறையாகும். மேலும், கடந்த கோவிட் தொற்றுநோயை எதிர்கொள்வதில் சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், அதற்கான அனைத்து ஆவணங்களும் உள்ளூராட்சி உதவி ஆணையரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கிறேன். | நஷ்டஈடு வழங்குவது சபைக்கு நன்மை பயக்கும் வகையிலும், தாமதமின்றி நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| இதனைவிட அதிகமானது என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) 2021 பாதீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர் கடனின் அதிகபட்ச வரவு மீதி எல்லையானது ரூபா 5,000,000 ஆன போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், அது ரூபா 29,457,290 ஆனமையால், உச் வரவு மீதி எல்லையானது ரூபா 24,457,290 இனை விஞ்சியிருந்தது. | அடுத்த ஆண்டு முதல் அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச வரம்புகள் சரியாக அமைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | ஊழியர் கடன்களுக்கு அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச வரம்புகள் விதிக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான சீதுவ தெற்கு சனசமூக மண்டபத்தின் ஒரு பகுதியில் 1997 ஆம் ஆண்டு முதல் உடற்பயிற்சி நிலையமொன்றை நடாத்திச் செல்வததற்காக சட்டரீதியான ஆவணமொன்று இல்லாது நபர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டிருந்தாக 2021 நவம்பர் 12 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தளப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. | இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து மேலும் முறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | சபையின் சொத்துக்கள் முறையாகவும் சட்ட ரீதியாகவும் பொது நலனுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |